# நடப்பு நிகழ்வுகள்- மே 12 - 2017

- **சர்வதேச செவிலியர் தினம்** (International Nurse Day) – **மே – 12**

- கோவை அருகே வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் உள்ள ஈஷா யோகா மையத்தில் அமைக்கப்பட்டுள்ள **112 அடி ஆதியோகி சிலையை உலகிலேயே மிகப்பெரிய மார்பளவு சிலையாக "கின்னஸ்" புத்தகம் அங்கீகரித்து உள்ளது.**

- **நியூயார்க் - இந்திய திரைப்பட விழாவில்** (New York Indian Flim Festival) **இந்திய நடிகை கொங்கனா சென் ஷர்மா** (Konkona Sen Sharma) **சிறந்த நடிகைக்கான விருது** பெற்றுள்ளார்.

- **இந்தியாவிற்கான பாகிஸ்தான் ஹை கமிஷனராக "சொகாயில் மக்மூத்"** (Sohail Mahmood) **நியமிக்கப்பட்டுள்ளார்.**

- **சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு** (ஜுன் - 21 - 2017) மிகப்பெரிய யோகாதினக் **கொண்டாட்டங்கள் ஆகமதாபாத் நகரில் நடைபெறவிருக்கின்றன.**

- **"திருநங்கையினரை"** பணியிலமர்த்திய இந்தியாவின் முதல் மெட்ரோ ரயில் நிறுவனம் என்னும் பெருமையை **கொச்சி மெட்ரோ நிறுவனம்** பெற்றுள்ளது.

- இந்தியாவின் **இராணுவத்துறை செயலராக சஞ்சய் மித்ரா** நியமிக்கப்பட்டுள்ளார்.

- **புத்த பூர்ணிமா** அல்லது **"சர்வதேச வெசாக் தினம்" மே - 10 - 2017** அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

- **"வேலைவாய்ப்பு கொள்கைகளுக்கான நம்பகமான தகவல்கள்"** (Credible data for employment policies) வழங்குவதற்கான உயர்மட்ட குழு **நிதி அயோக்கின் துணைத்தலைவர் அரவிந்த் பனகாரியா** அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

- பூமித்தாயின் பெருமையை பறைசாற்றும் விதமாக **“சாஹீவா”** (Sakewa) எனப்படும் **பூமிபூஜைத் திருவிழா சிக்கிம் மாநிலத்தில்** நடைபெறுகிறது.

- ஐக்கிய நாடுகளவையின் கீழ் செயல்படும் **“ஐ.நா மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒத்துழைப்பு அலுவலகத்தின்”** (United National Office for the Coordination of Humanitarian Affairs (OCHA)) துணைச் செயலர் ஜெனரலாக (United – secretary General) இங்கிலாந்தைச் சேர்ந்த **மார்க் லோகொக்** (Mark Lowcock) நியமிக்கப்பட்டுள்ளார்.

- இந்திய தேசிய அறிவியல் அகடெமியினால் (Indian National Academy (INSA)) 2017 ஆம் ஆண்டிற்கான **“இளைய அறிவியல் அறிஞர் விருது”** (Young Scientist award) ஐ.ஐ.டி மும்மையில் உதவிப் பேராசிரியராக பணிபுரியும் **விக்ரம் விஷால்** (Vikram Vishal) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- “**டிவிட்டர்** (Twitter) **நிறுவனத்தின் இந்திய தலைவராக** “**தரன்ஜீத் சிங்**” (Taranjeet Singh) நியமிக்கப்பட்டுள்ளார்.

- “**கார்ப்பட்**” (CORPAT – 2017) எனப்படும் **இந்தியா - இந்தோனேசியா** நாடுகளுக்கிடையேயான 29 – வது கூட்டு **இராணுவப்பயிற்சி** அந்தமான் நிக்கோபாரிலுள்ள **போர்ட் பிளேர்** பகுதியில் மே 9 ஆம் தேதி துவங்கியது.

- “**பஹாமஸ்**” (Bahamas) நாட்டின் **புதிய பிரதமராக “ஹீபர்ட் மின்னிஸ்”** (Hubert Minnis) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- **“இ - கிரிஷி சம்வத்”**(e-Krishi Samvad) எனப்படும் **விவசாயிகளுக்கான இணையவழி சேவையை** மத்திய விவசாயத்துறை அமைச்சர் **ராதா மோகன் சிங்** ஆரம்பித்துள்ளார்.

- **மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடுகை** பயன்பாட்டிற்கு பயிரிட அனுமதி வழங்குவது குறித்து ஜி.இ.ஏ.சி எனப்படும் மரபணு பொறியியல் மதிப்பீட்டு குழு மத்திய அரசுக்கு பரிந்துறை செய்துள்ளது.

- **ஐ.பி.எஸ். அதிகாரிகள்** தங்களது அசையா **சொத்து விவரங்களை தாக்கல் செய்யாவிடில் அவர்களுக்கு பதவி உயர்வு உள்ளிட்ட சலுகைகள் எதுவும் கிடைக்காது** என மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. முன்னதாக ஐ.பி.எஸ் அதிகாரிகள் 2017 ஜனவரி 31 – ம் தேதிக்குள் தங்களது சொத்துவிவரங்களை தெரிவிக்க வேண்டும் என அரசு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

- டில்லியில் நடைபெற்றுவரும் **ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில்** இந்திய வீராங்கனைகள் **சாஷி மாலிக்** (60கிலோ எடைப் பிரிவு) **வினேஷ் போகத்** (55 கிலோ எடைப்பிரிவு) **வெள்ளிப் பதக்கம்** வென்று உள்ளனர்.

- **"ராம்கோ"** குழும **தலைவர் பி.ஆர்.ராமசுப்பிரமணிய ராஜா** (82) உடல்நலக் குறைவால் 11 – 05 – 2017 அன்று **காலமானார்.**

- **வானில் உள்ள எதிரிகளின் இலக்குகளை தரையிலிருந்து தாக்கவல்ல "ஸ்பைடர்"** ரக **ஏவுகணையை இந்திய ராணுவம்** 11-05-2017 அன்று வெற்றிகரமாக **சோதித்தது.** அதிகபட்சம் 15 கிலோமீட்டர் தொலைவு வரை சென்று இந்த ஏவுகணையால் இலக்கை துல்லியமாக தாக்க முடியும்.

- **மாதா அமிர்தானந்தாமயிக்கு இசட் பிரிவுப் பாதுகாப்பை மத்திய அரசு வழங்கியுள்ளது.** அவரது ஆசிரமத்தில் 40 கமாண்டோ வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவார்கள் என்றும் அவருக்கு பல்வேறு மிரட்டல்கள் வந்ததையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. **யோகா குரு பாபா ராம்தேவுக்குப் பிறகு இசட் பிரிவுப் பாதுகாப்பு பெறும் இரண்டாவது ஆன்மீகத் தலைவர்** மாதா அமிர்தானந்த் மயி என்பது குறிப்பிடத்தக்கது.

- **வாரணாசி – கொழும்பு** இடையே ஏர் இந்தியா நிறுவனத்தின் **நேரடி விமான சேவை** வரும் ஆகஸ்ட் மாதம் முதல் தொடங்கும் என்று இலங்கையில் **பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.**

- **ஆஸ்திரேலியாவை** ஆழமாக **சீனா உளவு பார்ப்பதாக** சீனாவின் மீது ஆஸ்திரேலியா **குற்றம் சாட்டியுள்ளது.**